# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.230/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அகமது முஜாஹீதின் | Prosecution | LW-1 as PW-1. |
| Father Name | இஸ்மத் பாஷ்சா | Defence | |
| Village | மணலி | Taluk | திருத்துறைப்பூண்டி |
| District | திருவாரூர். | Age | 25/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **16.02.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. 1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து நகராட்சி அலுவலகத்தில் Co – ordinator ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.05.2023 ம் தேதி இரவு 8.00 மணிக்கு நான் ஆந்திராவிற்கு செல்வதற்காக திருத்துறைபூண்டியில் TN011995 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து SETC யில் ஏறினேன். மயிலாடுதுறை வரை பேருந்து நல்லவிதமாகவே வந்து கொண்டிருந்தது. இரவு 11.00 மணியளவில் சீர்காழிக்கும் சிதம்பரத்திற்கும் இடையில் பைப்பாஸில் அமைந்திருந்த இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் அருகில் நான் பயணம் செய்த பேருந்து வந்துகொண்டிருந்தது. நான் பேருந்தில் பின் பக்கம் அமர்ந்து பயணம்செய்து கொண்டிருந்தேன்.

மேற்கூறிய பெட்ரோல் பங்க் அருகில் பேருந்து வந்த போது அந்த இடம் மின்விளக்கு இல்லாமல் இருட்டாக இருந்தது. அப்போது எதிர் திசையில் இருந்து ஆக்டிவா ஸ்கூட்டியில் இரண்டு நபர்கள் சென்று கொண்டிருந்தார்கள். ஸ்கூட்டி மீது பேருந்து மோதாமல் இருப்பதற்காக பேருந்தை திருப்பியதில் அதே திசையில் இடது பக்கம் ஓரமாக நிறுத்தி

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.16 19:53:37 +0530

வைக்கப்பட்டிருந்த டேங்கர் லாரியின் மீது பேருந்து மோதியது. விபத்து ஏற்பட்ட போது இருக்கையில் அமர்ந்திருந்த நான் பேருந்தின் கம்பியில் மோதிக்கொண்டேன். அதில் எனக்கு இடது பக்க தலையிலும் வலது பக்க புருவத்திலும் காயம் ஏற்பட்டது.

அருகில் இருந்த நபர்கள் பெட்ரோல் பங்கில் இருந்து வந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் எங்களை சிகிச்சைக்காக சீர்காழிGHக்கு அனுப்பி வைத்தார்கள். சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கிக்கொண்டார்கள். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**முதலாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி பேருந்து ஓட்டுநர் என்பது போலிசார் கூறி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்தில் எத்தனை பேர் பாதிக்கப்பட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்து ஆஜர் எதிரியின் கவண குறைவால் நடக்கவில்லை எதிரில் வந்த ஸ்கூட்டியால் தான் நடந்தது என்றால் சரிதான். அதே போல் எந்த இடத்தில் விபத்து நடந்தது என்ற ஊர் பெயர் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். விபத்துக்கு பிறகு எனக்கு விபரம் தெரிந்து எத்தனை நபர்கள் இறந்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரே நிறுத்தப்பட்டிந்து எந்தவிதமாக எச்சரிக்கை விளக்கும் எரியவில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடம் முழுவதும் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். எதிரே நிறுத்தியிருந்த டேங்கர் லாரியில் எந்தவித வெளிச்சமும் இல்லை என்பதால் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். போலிசார் எழுதிய வாக்குமூலத்தில் நான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். வேறு யாரிடம் புகார் வாங்கினார்கள் என்பது பற்றி எனக்கு

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.02.16 19:53:45 +0530

தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரிந்த விபரப்படி பேருந்து ஓட்டுநர் அதிவேகமாக செல்லவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ நடக்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் யார் பெயர் எழுதி இருந்தது என்பது பற்றி எனக்கு ஞாபகமில்லை என்றால் சரிதான். எதிரில் ஸ்கூட்டியில் வந்த நபர்கள் எந்த ஊர், என்ன பெயர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

முதலாவது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

**இரண்டாவது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.16 19:53:51 +0530

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.230/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராஜ்மோகன் | Prosecution | LW-2 as PW-2. |
| Father Name | கணேசன் | Defence | |
| Village | ராயநல்லூர் | Taluk | திருத்துறைப்பூண்டி |
| District | திருவாரூர். | Age | 44/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **16.02.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. 1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி ஆஜரில்லை குவிமுச 317 படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து சென்னையில் மெட்ரோ வாட்டரில் ஓட்டுநராக பணிபுரிந்து தற்போது வீட்டில் வசித்து வருகிறேன். அசா.1 யை எனக்கு தெரியும். சம்பவத்தன்று நான் பயணம் செய்த பேருந்தில் பின்இறுக்கையில் அமர்ந்து பயணம் செய்து வந்தார். கடந்த 11.05.2023 ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் திருத்துறை பூண்டியில் TN 0A11995 என்ற பதிவெண் கொண்ட SETCஅரசு பேருந்தில் சென்னைக்கு செல்வதற்காக இரண்டாம் நம்பர் சீட்டில் கன்டெக்டருக்கு அருகில் அமர்ந்து பயணம் செய்தேன். இரவு 11.00 மணியளவில் சீர்காழி புறவழிசாலையில் அமைந்துள்ள இந்தியன் பெட்ரோல் பங்க் அருகில் அதிவேகமாக ஓட்டுநர் பேருந்தை ஓட்டிவந்தார் அப்போது எதிரே வந்த ஹோண்டா ஸ்கூட்டியில் 3 நபர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அதிவேகமாக பேருந்தை ஓட்டிவந்ததில் ஓட்டுநர் அந்த ஸ்கூட்டியின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார். ஸ்கூட்டியில் பயணம் செய்த மூன்று நபர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார்கள்.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.16 19:53:58 +0530

இடது பக்கம் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டேங்கர் லாரியின் மீது பேருந்தை அதிவேகமாக ஓட்டி மோதிவிட்டார்.டேங்கர் லாரியின் மீது பேருந்து மோதிய வேகத்தில் அந்த பேருந்து நடத்துனர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். நான் பேருந்திலிருந்து வெளியே தூக்கி எறிந்து ரோட்டில் விழுந்துவிட்டேன். அதில் எனது இடது முழங்காலில் அடிபட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. தற்போது அதில் இரண்டு பிளேட்டுகள்வைத்துள்ளேன். வலது முழங்கால் ஜவ்வு கிழிந்துவிட்டது. வலது முழங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்துள்ளேன். மேலும் எனக்கு முகத்திலும், தலையிலும் அடிப்பட்டு இருந்துது. பின் 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி GHக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சிதம்பரம் RMMCHக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். இந்த விபத்திற்கு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் தான் காரணம். அந்த பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் ஆஜரில் இருக்கும் எதிரி தான். விபத்து ஏற்பட அதிவேகம் தான் காரணம். இந்த விபத்து ஏற்பட்ட பிறகு நான் எந்த வேலைக்கும் செல்லாமல் ஏற்கனவே செய்து கொண்டிருந்த வேலையை விட்டு தற்போது வீட்டில் நடக்க முடியாமல் படுத்த படுக்கையாகவே இருந்து வருகிறேன்.

**முதலாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பேருந்தில் நானும் நடத்துனரும் ஒன்றாக தான் அமர்ந்து இருந்தோம் என்றால் சரிதான். நான் ஓட்டுநர் என்றால் சரிதான். அதிவேகம் என்பதற்கு எந்த அளவு கோளால் சொல்கிறேன் என்றால் பேருந்து திருத்துறைபூண்டியில் இருநது கிளம்பிய 10 நிமிடங்கிளேயே அவர் சாலையில் வைக்கப்பட்டு இருந்த ஒரு பேரி கேர்டில் மோதிவிட்டார். அப்போதே நான் நடத்துனரிடம் எதிரியின் அதிவேகம் பற்றி கூறினேன். மேற்படி சங்கதியை நான் எனது முதல் விசாரணை மற்றும் போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி பெயர் எனக்கு போலிசார் சொல்லிதான்

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.02.16 19:54:12 +0530

தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி எந்த ஊர் என்பது பற்றி தெரியாது என்றால் சரிதான். எனக்கு விபத்து நடந்தது சம்பந்தமாக நான் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னுடன் எத்தனை பேருக்கு காயம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு எதிரி அதிவேகமாகவும் , அஜாக்கிரதையாக பேருந்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும், நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த டேங்கர் லாரி எந்தவித சமிஞ்சையும் இல்லாமல் இருந்த காரணத்தாலும், விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஸ்கூட்டியில் வந்த நபர்கள் என்ன ஊர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நடத்துனரும் நானும் பேசிக்கொண்டு தான் வந்தோம் என்றால் சரிதான். நான் டிரைவர் சீட்டிற்கு இடது புறம் உள்ள சீட்டில் நான் அமர்ந்து வந்தேன் என்றால் சரிதான். நானும் நடத்துனரும் பேசிக்கொண்டு வந்த காரணத்தால் பேருந்து ஓட்டுநர் வேகமாக வந்த விபரம் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. பொதுவாக ஓட்டுநர் பயணிகளை பாதுகாப்பாக அழைத்து செல்ல தான் முயற்சிப்பார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சென்னையில் 15 வருடங்கள் லாரி ஓட்டியவர். அந்த அனுபத்தில் தான் இந்த விபத்து முழுக்க முழுக்க 1வது எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று உறுதியாக கூறுகிறேன். நான் சொல்வது போல் எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்பட வில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நானும் அந்த பேருந்து நடத்துனரும் கதை பேசி வந்த காரணத்தால் எனக்கு விபத்து பற்றி சரியாக தெரியாது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் இருட்டு பகுதி என்பதால் என்னால் விபத்தை பார்த்திருக்க முடியாது என்றால் தவறு அந்த இடத்தில் வெளிச்சம் இருந்தது.

**மறு விசாரணை**

நான் லாரி ஓட்டுநர் என்பதற்கு சான்றாக எனது ஓட்டுநர்

KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.02.16 19:54:19 +0530

உரிமத்தை வைத்துள்ளேன். அதனை தற்போது தாக்கல் செய்கிறேன்.

**(ஓட்டுநர் உரிம நகல் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் நான் எனது ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்க வில்லை என்றால் சரிதான். அவர்கள் அது பற்றியெல்லாம் என்னிடம் விசாரிக்க வில்லை.

முதலாவது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

**இரண்டாவது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.02.16 19:54:25 +0530